(ஈ) வரவு செலவுத் திட்டம் சம்பந்தமாக வழங்கப்பட்ட புத்தகங்களில் உள்ள புள்ளி விவர முரண்பாடு பற்றியும் நிதி ஒதுக்கீடு சட்ட முன் வடிவு நிறைவேற்றப்படும் வரை பேரவைக்கு வரட்சி நிவாரண செலவு பற்றிய வாராந்திர கணக்கு அளிப்பது குறித்தும்.

Dr. H.V. HANDE : I am not going into any discussion. My only point is this ....I am raising a point of order. I do not know whether we can discuss this or not. There are gross irregularities brought to our attention only a couple of days ago. I have brought that to the attention of the Hon. Chief Minister also. There is the Annual Plan for 1975–76. There is the Budget Estimates given in the Budget Memorandum. In a number of pages, and in the Tables also, the figures given do not correspond to each other. There is wide variation between the two figures............

மாண்புமிகு பேரவைத்தலைவர் : பின்னாலே அப்ரோபிரியேஷன் பில் வரும்போது பேசிக்கொள்ளுங்கள்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : அதற்குப் பிறகு ஒன்றும் செய்ய முடியாது.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : இப்பொழுது முன்டணை மான்யக் கோரிக்கை மட்டும்தான் வருகிறதே தவிர நீங்கள் சொல்வதைப் பற்றி பின்னால் பேசிக்கொள்ளலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பிறகு பேசிககொள்கிறோம். ஆனால், இப்பொழுது இருக்ககூடிய பிரச்னைகள் எல்லாம் பல குறைபாடுகளிருக்கின்றன. நான் டீடெய்ல்சுக்குப் போகவில்லை. ஆனால், இருப்பதைப் பேரவைத் தலைவருடைய கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

The outlay on large and medium industries is given as Rs. 16·9 crores, in the Annual Plan under Industries ; it is given as Rs. 6·2 crores in the Budget Memorandum.

இண்டஸ்ட்ரிஸிலே என்று கொடுத்திருக்கிறார்கள். பட்ஜெட் மெமோரண்டத்திலே ரூ. 6.2 கோடி என்ற கொடுத்திருக்கிறார்கள். பட்ஜெட் மெமோராண்டத்திற்கும் annual பிளானுக்கும் வேறுபாடு இருக்கிறது. இரண்டாவது கிட்டத்தட்ட 1/4 பங்கை, 3 மாதங்களுக்காக நாம் வழங்குகிறோம். ஆண்டிற்கு எவ்வளவு என்று பார்த்து, அதிலே 1/4 பங்கு தான் வோட் ஆன் அக்கவுண்டுக்கு வாங்கப்படுகிறது. சில விஷயங்கள் இங்கே விட்டுப் போயிருக்கின்றன.

In certain cases, payments and adjustments are usually made at the end of the year. Therefore, they are not given. In certain cases we have to make more demands.............
எல்லாம் என்ன பண்ணியிருக்கிறார்கள்? 1/4 பங்கு என்று, மேத்த

மெட்டிக்கல் கால்குலேஷன் மாதிரி போட்டிருக்கிறார்கள். சிலவற்றிற்குச் செலவையெல்லாம் ஜாஸ்தியாகப் போட வேண்டியிருக்கும். நேற்று கூட ஒரு பாய்ன்ட் எழுப்பப்பட்டிருக்கிறது. வறட்சி நிவாரணத்தைப் பற்றி எப்படி செலவு செய்வது என்று நமக்கு இப்பொழுது இருப்பது–எப்ரல் 10-ந் தேதிக்குப் பிறகு இந்த வோட் ஆன் அக்கவுண்ட் பிரயோஜனம் கிடையாது.

This will hold good until April 10th when we go in for the main Appropriation Bill. My submission is that until then this will be in operation. Therefore, till then a weekly statement on drought relief expenditure may be placed on the table of the House when the Assembly is in session. If the Hon. Speaker would give instructions to the Leader of the House or others concerned, that can be done. It has been done even in Lok Sabha in respect of Vote on Account..........

(Thiru V. Krishnamoorthy stood up)

I am on a point of order.

இந்த இரண்டு பாய்ன்ட்களில் இருக்கக் கூடிய இர்ரெகுலாரிட்டிஸைப் பார்க்க வேண்டும். இன்னொன்று, வீக்லி ஸ்டேட்மென்ட் ஆப் அக்கவுண்ட்ஸ் வைப்பதற்குத் தாங்கள் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்தால் நல்லதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இர்ரெகுலாரிட்டிஸ் இருக்கின்றன என்று சொன்னார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இருக்கிறது என்று சொல்லவில்லை, இருக்கிறதா வென்று பார்க்க வேண்டும் என்று சொன்னேன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி இர்ரெகுலாரிட்டிஸ் இருக்குமானல் அதை அப்ரோபிரியேஷன் பில் வரும் போது பார்த்துக்கொள்ளலாம்............

டாக்டர் எச். வி. ஹாண்டே: அப்ரோபிரியேஷன் பில்லுக்குப் பிறகு சட்ட சபைக் கூட்டம் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருக்கிறது. உட்காருங்கள். போதிய தொகை கேட்கவில்லை என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள், மேலும் அதிகமாகச் செலவிட வேண்டியிருக்கும் என்று சொன்னார்கள். நிதி நிலை அறிக்கையில் இருப்பதைவிட அதிகமாகச் செலவிட வேண்டுமானல் அப்படிப்பட்ட நிலையிலேதான் துணை மானியக் கோரிக்கைகள் வருகின்றன. ஆகவே, அதற்கு மேலே பணம் செலவிட வேண்டுமானலும் அதற்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(4) 1975—76-ம் ஆண்டின் செலவிற்கான முன்பண நிதிக் கோரிக்கைகள் (செலவினக்கணக்கின் மீது வாக்கெடுப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பேரவையின் முடிவிற்கு வைக்கிறேன் :—

" முன்பண மானியக் கோரிக்கைகளடங்கிய 20–3–1975 தேதியிட்ட அறிக்கையில் இரண்டாவது வரிசையில் 1 முதல் 57 முடிய எண்ணுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே நாலாவது வரிசையில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1976–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ம் நாள் முடிய உள்ள ஆண்டிற்கான செலவுக் கணக்கில் அரசுக்கு வழங்கப்பட வேண்டும் "

டாக்டர் எச். வி. ஹாண்டே : 120 கோடி ரூபாய்க்கு கேட்கிறார்கள், விவாதம் இல்லாமல் எப்படி அவ்வளவு ரூபாயை அனுமதிக்க முடியும், உங்களைக் கேட்கிறேன்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். என்னை ஏன் கேட்கிறீர்கள், உங்கள் தலைவரைக் கேளுங்கள். அலுவல் ஆய்வுக் குழுவிலே விவாதம் இல்லாமல் எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டுவிட்ட பிறகு இங்கே வந்து என்னை ஏன் கேட்க வேண்டும், உங்கள் தலைவரைக் கேளுங்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் என்று இம்மாதிரி சொல்வது சரியல்ல. அலுவல் ஆய்வுக் குழுவிலே விவாதம் இல்லாமல் எடுத்துக் கொள்ளலாம் என்பதை எல்லாத் தலைவர்களும் ஒத்துக்கொண்டோம். ஆகவே, அதிலே எந்தவிதமான பிரச்னையும் இல்லை. கட்சித் தலைவர் ஏதாவது தப்பாகச் சொன்னால் கட்சி உறுப்பினர்கள் அந்தத் தலைவர் மீது நடவடிக்கை எடுக்கலாம், ஏதோ கணக்குக் கூட்டலில் விடுதல் இருக்கிறது என்று சொன்னார்கள். அதைத் திருத்திக்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பட்டது.

[பேரவையினால் நிறைவேற்றப்பட்ட நிதிக் கோரிக்கைகளுக்கான தீர்மானங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.

" நிதிக்கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 98,66,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை.

நிதிக் கோரிக்கை எண் 2 —மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,69,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

நிதிக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள், சட்டங்கள் நிர்வாகம்.

"நிதிக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள், சட்டங்கள் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 19,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

"நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ.99,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்–நிர்வாகம்.

"நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 6—பத்திரப்பதிவு.

"நிதிக் கோரிக்கை எண் 6—பத்திரப்பதிவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 46,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 7—மாநில சட்ட மன்றம்.

"நிதிக் கோரிக்கை எண் 7—மாநில சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள்.

"நிதிக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 48,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

"நிதிக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,58,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 10— பால் வழங்குத் திட்டங்கள்.

"நிதிக் கோரிக்கை எண் 10—பால் வழங்குத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 24,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."